# தெளிவு பிறந்தது!

சேகர் மிகுந்த கவலையுடன் மருத்துவமனையுள் புகுந்தான். அங்குமிங்கும் அவன் கண்கள் எதையோ தேடின. ஆபரேசன் தியேட்டர் அருகே கவலையுடன் நின்று கொண்டிருந்த சிறு கூட்டத்தின் மீது அவனது பார்வை நிலைகுத்தி நின்றது. அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து இன்னும் முரளியை ஆபரேசன் தியேட்டரிலிருந்து வெளிக்கொண்டு வரவில்லை என்பது புரிந்தது.

மிகுந்த மனத்தளர்வுடன் அங்கிருந்து நகர்ந்து வாசற்படியை நோக்கி நடந்தான். ஏதோ இனம் புரியாத கவலைகள் அவன் மனதைக் கவ்விக் கொண்டிருந்தன. வாசற்படியை அடைந்தும் கூட வெளியேற மனமில்லாதவனாக அருகே கிடந்த பெஞ்சியில் சிறிதுநேரம் அமர்ந்தான்.

அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கால் முறிந்து ஆபரேசன் தியேட்டரில் கிடக்கும் முரளியைப் பார்க்காமல் செல்ல அவன் மனம் இடந்தரவில்லை. எப்படியாவது பார்த்துவிட்டே செல்வது என்ற உறுதியுடன் எழுந்தான். மீண்டும் ஆபரேசன் தியேட்டரை நோக்கி நடந்தான்.

பக்கத்தில் இருந்த நாற்காலியை அவர் அருகே இழுத்துப்போட்டு அதன் மீது அமர்ந்தான். அந்த நேரத்தில் நர்சும் அந்த அறையில் இல்லை.


மாமா அந்த உருவகக் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

இரண்டு உழவர்கள் பக்கத்துப் பக்கத்து வயல்களை உழுது கொண்டிருந்தார்கள். ஒரு உழவன் மிகவும் பொறுமையாகக் காட்சியளித்தான். அன்புணர்வு மிக்கவன்; மிகுந்த நிதானப் போக்குள்ளவன்; எதையும் முறையாகச் செய்ய வேண்டும், அப்போதுதான் வெற்றியும் முறையானதாக இருக்கும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவன்.

பக்கத்து வயலை உழுது கொண்டிருந்த உழவனோ இதற்கெல்லாம் நேர்மாறான தன்மையுள்ளவன். ‘இப்படித்தான் செய்ய வேண்டும்’ என்பதெல்லாம் அவனுக்குப் பிடிக்காத ஒன்று. ‘எப்படியாவது வெற்றிபெறவேண்டும்’ எனும் கொள்கையுடையவன். இதற்காக பொறுமை அது இது’ என்று எந்த முறையையும் கடைப்பிடிக்க விரும்பாதவன் இன்னும் சொல்லப்போனால் பொறுமை உணர்ச்சி அறவே இல்லாதவன்.

இந்த நிலையில் காலை நேரத்தில் இருவரும் ஏர்பூட்டி நிலத்தை உழத்தொடங்கினர். வெயில் ஏறிக்கொண்டே வந்தது. மதியம் ஆகியது.

பொறாமை அவன் மன அமைதியைக் குலைத்தது. கடுகடுத்த முகத்தோடு இருந்த அவன் மனம் அலுப்பும் சலிப்பும் அடைந்தது. தான் கால் பங்குகூட உழாத நிலையில் பக்கத்து உழவன் உழவையே முடிக்கப் போவதைப் பார்த்து மனம் வெதும்பினான். இதை அவனால் தாள முடியவில்லை. அவனுக்கு மிகுந்த ஆக்ரோஷம் ஏற்பட்டது. உழுவதை நிறுத்தி விட்டு, ஒரு கல்லைத் தூக்கிக்கொண்டு ஆத்திரமாகக் கத்தியபடி அடுத்தவன் வயலுக்குள் ஓடினான். வரப்புத் தடுக்கியது.



அடுத்தடுத்து இருந்த இரண்டு கிராமத் தலைவர்கள் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். ஒருவரையொருவர் உயிருக்குயிராக நேசித்தனர். ஈருடல் ஓருயிர் என வாழ்ந்தனர். வேதனையிலும் சோதனையிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொண்டனர். இதனால் இரண்டு கிராமமக்களும் குறை ஏதும் இல்லாமல் நிறைவாக வாழ்ந்தார்கள்.

இந்த நண்பர்களில் ஒருவர் கருத்த மயிரை உடையவராக இருந்ததால் 'கருந்தலையர்' என அழைக்கப்பட்டார். மற்றொருவர் தலைமுடி செம்பட்டையாக இருந்ததால் 'செந்தலையர்' என அழைக்கப்பட்டனர். இருவருக்குமே இயற்பெயர் இருப்பினும் இப்பட்டப் பெயராலேயே மக்கள் அழைத்துவந்தனர். நாளடைவில் இதுவே இவர்களின் பெயராகவும் அமைந்துவிட்டது.

ஒருநாள் கருந்தலையரின் கிராமத்தில் சுழற்காற்று சூறாவளிக் காற்றாக சுழன்று சுழன்று அடித்தது. இதனால் சில மரங்களும் பல மரக்கிளைகளும் ஒடிந்து விழுந்துவிட்டன. விழுந்து விட்ட இம்மரங்களை என்ன செய்வது என்று கருந்தலையர் ஆலோசித்தார். அவரது வேலையாட்களில் ஒருவன் முறிந்து விழுந்துள்ள மரங்களைக் கழிகளாக வெட்டி எடுத்து கோழிக் கூண்டு செய்யலாம் என்றும், கோழி வளர்க்க உதவும் என்று ஆலோசனை கூறினான்.

அவர்கள் மனம் வேதனையால் துடித்தது. இறுதியில் அவர்களின் அடிமனத்தில் உறங்கிக் கொண்டிருந்த பாசமும் நேசமும் தலை தூக்கியது. இருவரும் ஓடிவந்து ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். அவர்கள் கண்கள் நீரைச் சொரிந்தன.



காரணம் இல்லாமல் ஏற்படும் சந்தேகமும் அச்சமும் எப்படியெல்லாம் மனிதர்களை ஆட்டி வைக்கிறது என்பதற்கு இந்தக் கதையே சான்றாகும். தாங்கள் மட்டுமல்லாது தங்களைச் சார்ந்தவர்களும் எப்படியெல்லாம் பாதிப்புக்கு ஆளாவார்கள் என்பதற்கு பாழ்பட்டுப்போன இரு கிராம மக்களின் வாழ்க்கையே உதாரணம்.